8. ஒருங்கிணைத்தல் (ஒருங்கிணைத்தல் என்றால் என்ன?)

அமைப்பின் விரும்பத்தக்க இலக்குகளை அடைய, அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.ஒரு துறைவாரி பண்டகசாலையிலுள்ள ஒவ்வொரு துறையின் பணிகளும் மற்ற துறைகளின் பணிகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

9. அதிகார ஒப்படைவு (அதிகார ஒப்படைவு என்றால் என்ன?)

ஒப்படைவு என்பது பணிகளின் ஒரு பகுதியைக் கீழ் பணியாளர்களுக்கு ஒப்படைப்பதாகும், அதை நிறைவேற்ற அவருக்குத் தேவையான அதிகாரங்களையும், உரிமையையும் வழங்க வேண்டும். ஒப்படைவு என்பது கீழ்பணியாளர் கடமைப்பட்டிருத்தலை உருவாக்குவதாகும்.

10. பொறுப்புக் கோட்பாடு

ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்குப் பொறுப்பாகிறார்.அலுவலர் தனது மேலதிகாரிகளுக்குப் பொறுப்பாகிறார்.

11. நெகிழ்வுத் தன்மை

ஒரு அமைப்பு மாற்றியமைக்கக் கூடிய வகையில் நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டும்.மாறும்சூழ்நிலைகளுக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.விரிவுபடுத்தக் கூடிய வகையில் அது இருக்கவேண்டும்.

12. திறமை

எந்த நிறுவனத்திற்கும் "திறமையே" மந்திரச் சொல்லாக இருக்கவேண்டும்.திறமையான முறையில் குறிக்கோள்களை அடையச்செய்யவும், குறைந்த செலவில் பணிகளை நிறைவேற்றும் வகையில் ஓர் அமைப்பின் வடிவமைப்பு இருக்க வேண்டும்.

13. தனித்திறமை

ஓர் அமைப்பை உருவாக்குவதில் தனிநபர் திறமை தொடர்புற்று இருப்பதால் பணியாளர்கள் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது.

14. எளிமை

அதிகாரப் படிநிலை மட்டங்கள் அதிகமிருப்பின், செய்தித் தொடர்புகள் சிக்கலாகும். இதனால் குழப்பமும்,மோதலும் ஏற்பட்டு, ஒருங்கிணைப்பு ஏற்படாமல் போகும்.

2.தனியாள் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை?

1. தனி நபர் உரிமையும் கட்டுப்பாடும்

ஒரு தனி நபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு ஆகும்.

அவரே இதன் உரிமையாளராகவும் மற்றும் வணிகத்தின் தலைவராகவும்,சுதந்திரமாக வணிக நடவடிக்கையைமேற்கொள்கிறார்.

2. மூலதனம்

தனியாள் வணிகத்தில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார்.

தொழிலுக்குத் தேவையான முதலை, தன் சொந்த சேமிப்பிலிருந்து செலுத்துகிறார்.

அவர் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, நிதி நிறுவனங்களிடமோ கடன் பெற்றும் முதலீடு செய்யலாம்.

3. வரையறாப் பொறுப்பு

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.

இதனால் தனி வணிகர் தன்வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.

4. இலாப நட்டம்

வியாபாரத்திலிருந்து கிடைக்கும் முழு இலாபமும் தனிநபருக்கே உரியது.

அதுபோலவே நட்டத்தையும் தனி நபரே ஏற்கவேண்டும்.எனவே, இலாபமும், நட்டமும் அவரையே சாரும்.

5. சட்டத் தனித்துவம் இன்மை

தனியாள் வியாபாரத்தில் தனியாள் வணிகரும் வியாபாரமும் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

உரிமையும் நிர்வாகமும் ஒன்றாகவே கருதப்படுகிறது.

யார் உரிமையாளரோ அவரே நிர்வாகத்தையும் மேற்கொள்கிறார்.

6. தனிச்சட்டம் இல்லை

இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், இந்திய நிறுமச் சட்டம், இந்திய கூட்டுறவுச் சட்டம் இருப்பதைப்போல தனி வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

7.பதிவு

தனி வணிகர் தன் எந்த சட்டத்தின் கீழும் தொழிலைப்பதிவு செய்ய வேண்டியதில்லை.சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள நகராட்சி, மற்றும் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெற்றால் போதும்.

8. வாழ்வு

தனியாள் உரிமையரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும்அவருடைய தொழிலையும் பாதிக்கும். அவருடைய இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறமையை இழத்தல் முதலியன தனியாள் வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்.

9. எளிமை

தனியாள் வணிகத்தைத் தொடங்குவதும், கலைப்பதும் எளிது.

தனியாள்வணிகத்தைக் கலைக்க சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியதில்லை.

10. உள்ளூர் வியாபாரம்

தனியாள் வணிகம் உள்ளூர் அளவிலேயே நடைபெறுகின்றன.

சிலவகைத் தனியாள் வணிகங்கள் கிளைகளுடன் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

11. சுய வேலைவாய்ப்பு

தனியாள் வணிகர் பெரும்பாலும் தனது சொந்த உழைப்பையே வியாபாரத்தில் பயன்படுத்துகிறார்.

இவர் தேவைப்பட்டால் சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் .

12. குறைந்த முதல்

தனியாள் வணிகத்தை துவங்க மிகவும் குறைந்த முதலே போதுமானது.

3.தனியாள் வணிகத்தின் நன்மைகள் யாவை?

1. எளிதான அமைப்பு

தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுமின்றித் துவக்கலாம்.

ஒப்பந்தம், பதிவு முதலியனதனியாள் வணிகத்திற்குத் தேவையில்லை.

தொழில் தொடங்க ஆர்வமுடையவர் எவரும் மிகக் குறுகிய காலத்திற்குள் இத்தொழிலைத் துவங்க முடியும்.

2. நேரடி ஊக்குவிப்பு

வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனிஆள் வணிகரையே சேர்கிறது.

அதில் வேறு எவரும் பங்கு கோர முடியாது.அவர் தன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்ய இது உரிய ஊக்குவிப்பாக அமைகிறது.

3.நெகிழ்வுத் தன்மை

பொதுவாக தனியாள் வணிக அமைப்புகள் சிறியளவில் செயல்பட்டு வருகின்றன.

தான் நடத்தி வரும் வணிகத்தை மாற்ற வேண்டும் என்றால் அதிக செலவு இல்லாமல் மாற்றிக்கொள்ளலாம்.தனி வணிகர் ஒருவரே உரிமையாளர் என்பதால் சந்தை நிலவரத்திற்கேற்ப தன் வியாபார தன்மைகளை மாற்றிக்கொள்ளலாம்.

4. வியாபார இரகசியங்களைக் காத்தல்

தன் வியாபார முடிவுகளை தனியாள் வணிகர் யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை.

வியாபார கணக்குகளையும் மற்றும் தொழில் சார்ந்த உண்மைகளையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது இல்லை.

5. விரைவான முடிவு

தனியாள் வணிகர் ஒருவர், தானே உரிமையாளராகவும் இருப்பதால்,முடிவு எடுக்கும் முன்பு அவர் வேறு எவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே அவர் விரைவான முடிவு எடுத்து அதை செயல்படுத்தவும் முடியும்.

6.அதிக வெகுமதி

தனியாள் வணிகர் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத் தவறினால் நட்டம் ஏற்பட்டுவிடும்.

இதுகடின உழைப்பிற்குத் தூண்டுகோலாய் அமைகிறது.கவனமான அணுகுமுறை, பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகள் கிடைக்கிறது.

7.திறன்மிகு கட்டுப்பாடு

தனியாள் வணிகத்தில், உரிமையாளர் ஒருவர் மட்டுமே இருப்பதால் தொழில் நடவடிக்கைகளை நன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும்.

கொள்முதல், விற்பனை தொடர்பான முடிவுகளை தனி ஒருவரே மேற்கொள்வதால் திட்டமிட்டபடி மாற்றம் ஏதுமில்லாமல் வியாபாரத்தை நடத்த முடிகிறது.

8. அதிகளவு விற்பனை

தனியாள் வணிகரே வியாபாரத்தை நிர்வகிப்பதால் தன் வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்கிறார்.

தன் வாடிக்கையாளர்களையும், அவர்களின் விருப்பு வெறுப்புகளையும் நன்கறிவார்.இதனால் விற்பனை அதிகரிக்கிறது.

9. வியாபாரத்தை எளிதாக நடத்துதல்

தனியாள் வணிகம் சிறிய அளவிலான வியாபார நிறுவனமாதலால் பணியாளர்களிடம் நேரடித் தொடர்பு உள்ளது. தனியாள் வணிகர் மற்றும் அவர் பணியாளர்களிடையே ஒரு சுமுக உறவு நிலவுதல், இடர்பாடுகள் இன்றி வியாபாரம் சுமூகமாக நடைபெற உதவுகிறது.

10 .சிக்கன மேலாண்மை

தனியாள் வணிகத்தில் தனி ஒருவரே உரிமையாளராகவும்,மேலாளராகவும் செயல்படுவதால் ஊதியம் பெறும் மேலாளர், மற்றும் தொழில் நுட்பம் அறிந்த நபர்களை இவர் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில்லை. எனவே நிர்வாகச்செலவு குறைகிறது.

11. அதிக நிதி தர மதிப்பீடு

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. இதனால் தனியாள் வணிகருக்கு பலர் கடன் தர முன்வருவர்.இதனால் அதிகக் கடன் பெறும் வாய்ப்பு தனியாள் வணிகருக்குஏற்படுகிறது.

12.சுய வேலைவாய்ப்பு

தனி வணிக அமைப்பு குறைந்த மூலதனமுடைய பல நபர்களுக்கு தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது.சுயதொழில் தொடங்க தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

13. ஆளுமை வளர்ச்சி

தன்னம்பிக்கை, தொழில் தொடங்கும் முயற்சி, சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்ற சிறந்த பண்புகள் வளர தனி வணிகஅமைப்பு வகை செய்கிறது.

14. எளிமையான கலைப்பு

தனியாள் வணிகர் தான் விரும்பியபோது அவரது வணிக அமைப்பினை எவ்வித சட்டமுறை சிக்கலும் இல்லாமல் கலைக்கலாம்.

4.தனியாள் வணிகத்தின் குறைகள் யாவை?

1. அளவான முதல்

தனியாள் உரிமையாளர் தன்னுடைய சொந்த மூலதனத்தையும் மற்றவர்கள் வழங்கும் கடனையும் மட்டுமே நம்பி இருக்கிறார்.தனி நபரிடம் உள்ள நிதி ஆதாரங்கள் வியாபாரப் வளர்ச்சிக்கேற்ப போதாது. நிதித் தடை தனி வணிகத்திற்கு பெரும் குறையாக உள்ளது.

2. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்

ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் மேலாண்மைத் திறமைக்கும் எல்லை உண்டு.அனைத்திலும் தனி வணிகர் வல்லுநராக திகழ இயலாது.வியாபார வளர்ச்சிக்குக் குறைந்த மேலாண்மைத் திறன் இடையூறாக அமைகிறது.

3. வரையறாப் பொறுப்பு

தனி வணிகரின் வரையறாப் பொறுப்பு அவருடைய ஆர்வத்தை பாதிப்பதாகவும், வியாபாரத்தில் புதிய எண்ணங்களைப் புகுத்தத் தடையாகவும் உள்ளது.

4.குறுகிய வாழ்வு

தனியாள் வணிக உரிமையாளரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும். தனியாள் வணிகம் திடீர் என முடிவுக்கு வருவது நுகர்வோருக்கும்,சமுதாயத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

5. அவசர முடிவு

தனியாள் வணிகத்தில் அவசரத்தில் தவறான முடிவு எடுப்பதற்கு வாய்ப்புகள் அதிகமுண்டு.ஏனெனில், பலருடன் விவாதிக்காமல் தனியாள் ஒருவரே முடிவு எடுக்கிறார்.இது தவறான முடிவாக அமைய வாய்ப்பு உள்ளது.

6. சிறப்பு தேர்ச்சியின்மை

கொள்முதல், விற்பனை, கணக்குப் பதிவியல், நிதி திரட்டுதல்,விளம்பரம் செய்தல் போன்ற தொழிலின் அனைத்துப் பணிகளையும் தனி வணிகர் ஒருவரே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சிறப்புத் தேர்ச்சியின் பயனை தனியாள் வணிகத்தில் அடைய இயலாது.

7. குறைந்த அளவு வியாபாரம்

முதல் மற்றும் திறமை குறைவாக இருப்பதால், தனி வணிகர்கள் தங்களது வணிக அமைப்புகளை சிறியதாகவே அமைத்துக் கொள்கின்றனர்.இதனால் பேரளவு உற்பத்தியில் உடுபடமுடியாது.

8.கலந்து ஆலோசனையின்மை

தனி வணிகர் சில முக்கிய முடிவுகளை எடுக்கும்போது குடும்ப அங்கத்தினரைத் தவிர, பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார்.அவரது முடிவு தவறானதாகிவிட்டால், இது பெரும் நட்டத்தில் முடிவடையும்.

9. நிலையற்ற தன்மை

தனி வணிக அமைப்பின் வாழ்வு உறுதியற்றது, மற்றும் நிலையற்றது.நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மற்றும் தொழில் நுட்ப மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே தனி வணிகரின் வியாபாரம் அமையும். அவ்வாறு தனியாள் வணிகம் நவீன வளர்ச்சிக்கேற்றவாறு மாற்றிக் கொள்ளாவிட்டால் அவர் பல சிரமங்களை சந்திக்க நேரிடும்.

10. முழு நட்ட அபாயம்

தனியாள் வணிகர் ஒரு நபராக இருப்பதால் தொழிலில் ஏற்படும் மொத்த நட்டத்தையும் அவர் ஒருவரே ஏற்க வேண்டும்.

5. சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு பற்றி விளக்குக.

நுகர்வோர்கள் வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள்.

நுகர்வோரின்தேவைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வியாபாரிகள் பூர்த்தி செய்கின்றனர்.

நுகர்வோருக்குத் தேவையான சரக்குகள், சேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதில் தனி வணிகர் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அன்றாடம் நுகர்வோருக்குத் தேவையான உணவு, துணி, எழுது பொருட்கள், சலவை, மளிகைப் பொருட்கள், புத்தகங்கள், செய்தித் தாள்கள், மருந்துப் பொருட்கள் முதலியன தனியாள் வணிகரால் அளிக்கப்படுகிறது. இவ்வகை பொருட்களை வழங்கும் தனி வணிகர்கள் சமுதாயத்தால் மதிப்படுகிறார்கள்.

இவ்வாறு தனியாள் வணிகர் சமுதாய நலன் காப்பதில் பொறுப்பேற்கிறார்.

எனவே இவ்வகையான தொழில் அமைப்புகள் சமுதாயத்தாலும் விரும்பப்படுகிறது.

சமுதாயத்திற்கு சேவை செய்வதில் தனி வணிகரின் பங்கு முக்கியமானது.

கீழ்க்கண்ட வழிகளில் தனி வணிகர்கள் சமுதாயத்திற்கு தங்கள் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

1.. வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு:

தனியாள் வணிகம் குறைந்த கல்வியறிவு உடையவருக்கும்கல்வியறிவு அற்றவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது.சமுதாயத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதில் தனி வணிகர் பெரும் பங்கு வகிக்கிறார்.

2.முதலீட்டிற்கான வாய்ப்பு:

தனி வணிகம் சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது.இது சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்குப் பயன்படுத்த உதவுகிறது.

3. குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்:

நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால் தனி வணிகர் பொருட்களின் மீதான அதிக பட்ச விலையை விட குறைவான விலைக்கு பொருட்களை விற்பனை செய்கிறார்.

4. சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்:

உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து பெரும்பான்மையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

5. தரமான பொருட்களை அளித்தல்:

தற்காலத்தில் தனி வணிகர் தன் வியாபார நன்மதிப்பைக் காக்க தரமான பொருட்களை விற்பனை செய்கிறார். விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்.இது மக்கள் நலம் உயர்த்துவதில் உத்திரவாதம் அளிக்கிறது.

6.தர்ம சிந்தனையுடைய நடவடிக்கைகள்:

தனி வணிகர்கள் தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு கண் பரிசோதனை முகாம்கள், பூங்காக்களைப் பராமரித்தல், பள்ளிகளுக்கு அறைகலன்களை வழங்குதல் போன்ற பல்வேறு சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளைமேற்கொள்கின்றனர்.

7.வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்:

பலர் வியாபார உலகில் தனியாள் வணிகராக ஈடுபட வாய்ப்பளிப்பதால் வருமானம் மற்றும் வளங்களைச் சமமாகப்பகிர்ந்தளிக்க உதவுகிறது.

8. நுகர்வோருக்கு உதவுதல்:

தனியாள் வணிகர்கள் நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்கச் செய்கிறார்கள்.இதனால் நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சப்படுத்தப்படுகிறது.

6.தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது – விவரி

வில்லியம் பேசட் அவர்கள்,"உலகிலேயே தனிநபர் கட்டுப்பாடுதான் சிறந்தது என்றும் சிறிய தொழிலாக இருந்தால் மட்டுமே ஒருவர் அவ்வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்ய இயலும்" என கூறுகிறார்.

தனிநபர் கட்டுப்பாட்டிற்கு சாதகமானவை

(1)எளிமையானது மற்றும் விரைவாக அமைத்தல்:

சட்டச்சிக்கல் ஏதுமின்றி விரும்பிய உடன் தொழில் தொடங்கலாம், ஒப்பந்தம், பதிவு எதுவும் தேவையில்லை.மிக இயல்பான எளிமையான அமைப்பு.

(2)நேரடி கட்டுப்பாடு:

உரிமையாளரே தொழிலை மேற்கொள்வதால், பணியாளர் செயல்திறன் அதிகரிக்கும், செயல்பட்டில் சிக்கனம் காணப்படும், தொழிலாளர் பிரச்சனைகள் சுமூகமாக தீர்க்கப்பட்டு தொழில் சிறப்பாக நடைபெறும்.

(3)முயற்சி மற்றும் பலன் இணைதல்:

இலாபம் பங்கிடப்படவேண்டியதில்லை.இது முழுமையாக தனிவணிகரை சாரும்.உழைப்பை அதிகப்படுத்தினால் அதிகரிக்கும் பலன் இவரை மட்டுமே சாரும்.இது தொழில் விரிவாக்கத்திற்கு ஊக்குவிப்பாக அமைகிறது.

(4)வியாபார இரகசியம் காத்தல்:

போட்டி வியாபார உலகில் தொழில் ரகசியம் காத்தல் அவசியம்.இங்கு ஒரே நபர் என்பதாலும், ரகசியம் காப்பது அவருக்கு நன்மை விளைவிக்கும் என்பதால் தொழில் இரகசியம் காக்கப்படுகிறது.

(5)நுகர்வோரிடம் நெருங்கிய தொடர்பு:

நேரடியாக தொழில் மேற்கொள்வதால் நுகர்வோருடன் நெருங்கிய உறவு காண முடிகிறது. இதனால் அவர்கள் விருப்பு

வெறுப்புகளை உணர்ந்து உரிய சேவையை செய்கின்றனர்.நுகர்வோர் மனநிறைவுடன் தொடர்ந்து ஆதரவளித்து வாடிக்கையாளர் ஆகின்றனர்.

(6)இலாபம் முழுவதையும் அனுபவித்தல்:

வேறு அமைப்பில் இல்லாத ஒரு பலன் இவருக்கு லாபம் முழுவதும் கிடைப்பதே ஆகும்.இதனால் கவனமாகவும், கடினமாகவும் உழைக்கத் தோன்றுகிறது.தொழில் வளர்ச்சியில் அக்கறை அதிகம் காட்டுகிறார்.

(7)சிக்கன மேலாண்மை:

நேரடியாக தொழில் மேற்கொள்கிறார்.பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களே பணிபுரிகின்றனர்.இதனால் பொருட்கள் சேதமடைதல், வீண்விரயம் இல்லை.குறைந்த நிர்வாகச் செலவில் மிகுந்த பலன் கிடைக்கிறது.

(8)சட்ட சிக்கல் இன்மை:

தனிவணிகத்திற்கென சட்டம் இல்லை.தொடங்க அனுமதி ஏதும் பெறவேண்டியதில்லை, பதிவு தேவை இல்லை, அரசு கட்டுப்பாடு ஏதுமில்லை எனவே நிர்வாகம் தலையீடின்றி சிறப்பாக நடைபெறுகிறது.

(9)பணியாளரிடம் நேரடித் தொடர்பு:

சிறுதொழில், குறைந்த எண்ணிக்கையில் பணியாளர்கள், நேரடி கட்டுப்பாடு, எனவே, பணியாளருடன் நேரடித் தொடர்பு இருக்கும்.குறைகள் உடனே தீர்க்கப்படும்.வேலைநிறுத்தம் போன்ற பிரச்சனை எழவாய்ப்பில்லை.

(10)சமுதாயத்திற்கு பயன்மிகு செயல்கள்:

வணிக அமைப்புகள் லாபம் பெறுவதோடு சமுதாய மேம்பாட்டிற்காக, மருத்துவமுகாம் நடத்துவது, சாலையோர பூங்காக்கள் அமைத்து பராமரிப்பது, ஏழை மாணவ மாணவியருக்கு இலவசசீருடை, பாடபுத்தகம் தருவதென பல நலப்பணிகள் புரிகின்றன.

7.கூட்டாண்மை – தனியாள்வாணிகம்வேறுபாடுகள்

| | கூட்டாண்மை | தனியாள் வணிகம் |
|---|---|---|
| 1. சட்டம் | இந்தியகூட்டாண்மைச்சட்டம் 1932 | தனிச்சட்டம்ஏதுமில்லை |
| 2. உறுப்பினர் | குறைந்த அளவு 2 பேர்,<br>அதிக அளவு வங்கித் தொழில் எனில் 10 பேர்இதர தொழில் எனில் 20 பேர் | ஒருவர் மட்டுமே உரிமையாளர் |
| 3. உடன்பாடு | உடன்பாட்டால்உருவாக்கப்படுகிறது | உடன்பாடு ஏதும் இல்லை |
| 4. பதிவு | கூட்டாண்மைக்குபதிவு கட்டாயமில்லை | பதிவு என்ற பேச்சுக்கே இடமில்லை |
| 5. முதல் | அதிக முதல் திரட்டலாம் | அதிக முதல் திரட்ட முடியாது |
| 6. பொறுப்பு | வரையறாபொறுப்பு ,கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு | வரையறா பொறுப்பு மட்டும். |
| 7. இலாபப் பகிர்வு | உடன்பாட்டின்படி அல்லது சமமாக இலாபநட்டத்தை பகிர்ந்து கொள்வர் | இலாபமோ, நட்டமோ இதில் ஒருவரே ஏற்கவேண்டும். |
| 8. முடிவுகள் | அனைத்து கூட்டாளிகளையும் கலந்து பேசிமுடிவு எடுக்க வேண்டும் எனவே காலதாமதமாகும். | ஒருவர் மட்டுமே என்பதால் முடிவுகளைவிரைவாக எடுக்கலாம் |
| 9. வேலை பகிர்வு | தன் திறனுக்கேற்ப ஒவ்வொருவரும் நிறுவனவேலையை பகிர்ந்து செய்வர் | ஒருவர் மட்டுமே என்பதால் வேலை பகிர்வுக்கு வாய்ப்பே இல்லை. |
| 10. தொழில் இரகசியம் | தொழில்இரகசியங்களைகாத்தல்கடினம். | தொழில்இரகசியங்களைகாத்தல்எளிது |
| | | |

8. கூட்டாண்மை நிறுவனத்தின் நிறைகள் குறைகள் யாவை?

கூட்டாண்மை அமைப்பின் நிறைகள்

1. அமைத்தல் எளிது:

நிறுமத்துடன் ஒப்பிடும்போது அமைத்தல் எளிது கூட்டாண்மையை துவங்க கூட்டாளிகளிடையே உடன்பாடே போதும்.

2. பதிவு கட்டாயமில்லை:

கூட்டாண்மை பதிவு விருப்பத்திற்குட்பட்டது.எந்த நிலையிலும் விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம்.

3. அதிக நிதி ஆதாரங்கள் :

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் உள்ளதால் அதிக முதல் திரட்ட வாய்ப்பு உள்ளது.வரையறா பொறுப்பு உள்ளதால் அதிக கடன் பெறும் திறன் உள்ளது.

4. கூடுதல் மேலாண்திறன் :

ஒன்றுக்கு மேற்பட்டோர் உள்ளனர்.எனவே, திறமைக்கேற்ப பணிகளை பகிர்ந்து செய்கின்றனர்.

இதனால் வளர்ச்சியும், லாபமும் அதிகமாகும்.

5. சிறந்த தொழில் முடிவுகள் :

கூட்டாளிகள் ஆலோசித்து விவாதித்து நல்ல, சிறந்த தொழில் முடிவுகளை எடுக்க முடியும்.

6. இடர்பாட்டில் பங்கேற்பு :

தொழில் இடரை சுமக்க ஒன்றுக்கு மேற்பட்டோர் உள்ளனர்.இதனால் புதிய தொழில் முயற்சியும், தொழில் விரிவாக்கமும் தைரியமாக மேற்கொள்ளப்படும்.

7. சிறுபான்மை நலம் காப்பு :

முக்கிய தொழில் முடிவுகளை அனைத்து கூட்டாளிகளும் உடன்பாட்டால் மட்டுமே மேற்கொள்ளமுடியும்.சிறுபான்மை கூட்டாளிகளின் நலன்களை புறக்கணிக்க முடியாது.

8. நெகிழ்வுத் தன்மை :

கூட்டாளிகளின் இசைவுடன் எந்த மாற்றத்தையும் எளிதில் மேற்கொள்ளலாம்.

9. நேரடி மேற்பார்வை :

உரிமையாளர்களே மேற்பார்வை செய்வதால் பணியாளர்களுடன் நேரடி உறவு கொள்வதால் தொழிலாளர் பிரச்சனைகளை வளரவிடாமல் தீர்க்கலாம்.

10. சிறந்த மக்கள் தொடர்பு :

கூட்டாளிகள் பணியாளர், நுகர்வோர், அரசு, பொதுமக்கள் ஆகியோருடன் நேரடி தொடர்பு கொள்ள முடிகிறது.இதனால் நிறுவன நற்பெயரை உயர்த்த முடிகிறது.

9.கூட்டாண்மை அமைப்பின் குறைகள் :

1. வரையறாபொறுப்பு :

தொழில் கடன்களுக்கு கூட்டாளிகளின் சொந்த சொத்து பொறுப்பேற்க வேண்டும்.

2. போதுமான நிதியின்மை :

பல கூட்டாளிகள் இருப்பினும் மிக அதிக முதல் திரட்டி பேரளவு தொழில் மேற்கொள்ள முடியாது.

3. உட்கிடை ஆணையுரிமை அபாயம் :

ஒரு கூட்டாளியின் செயல் பிற கூட்டாளிகளை கட்டுப்படுத்தும்.நேர்மையற்ற, திறமையற்ற ஒரு கூட்டாளி தன் செய்கையால் பிறருக்கு தீமை இழைக்க வாய்ப்பு உள்ளது.

4. உரிமை மாற்ற தடை :

அனைவரின் இசைவின்பேரில்தான் தன்பங்கை மற்றவருக்கு மாற்ற முடியும்.

5. நீடித்த வாழ்வின்மை :

ஒரு கூட்டாளியின் மரணம், விலகல் போன்றவை கூட்டாண்மை அமைப்பை முடிவுக்கு கொண்டு வந்துவிடும்.

10. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகளை விவரி.

( கூட்டாளிகளின் உரிமைகள் 8மதிப்பென் வினா-விடையில் உள்ளது)

கூட்டாளியின் கடமைகள் :

ஒவ்வொரு கூட்டாளியும்

1) தன் கடமைகளை கவனக்குறைவின்றியும், நாணயமாகவும், நிறைவேற்ற வேண்டும்.

2) ஏனைய கூட்டாளிகளிடம் விசுவாசமாக, உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயல்பட வேண்டும்.

4) உடன்பாடு இல்லாத போது நிறுவன நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர்.

5) தொழில் நடவடிக்கையில் தன் தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு நிறுவனத்திற்கு உட்டுறுதி செய்ய வேண்டும்.

6) பிற கூட்டாளிகளின் இசைவின்றி தன் பங்கை பிறருக்கு மாற்றக் கூடாது.

7) நிறுவன கணக்குகளை உண்மையாகவும், சரியாகவும் வைத்திருக்க வேண்டும்.

8) கூட்டாண்மைக்கு எதிராக எத்தொழிலையும் போட்டியாக நடத்தக்கூடாது.

9) நிறுவன நலனுக்காக மட்டுமே நிறுவன சொத்துக்களை பயன்படுத்த வேண்டும்.

10) எக்கூட்டாளியும் இரகசிய லாபங்களை உட்டக்கூடாது.

11. கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக

கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள்:

(1) கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு:40)

கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பட்டால் கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

(2) கட்டாயக் கலைப்பு (பிரிவு:41)

கூட்டாளிகளின் நொடிப்பு நிலையால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்.

தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்.

(3) சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு:42)

(அ) ஒரு கூட்டாளி இறந்துவிடின்

(ஆ) குறித்த கால கூட்டாண்மையின் காலம் முடிவடைந்தவுடன்

(இ) குறித்த செயல் கூட்டாண்மையில், செயல் நிறைவு பெற்றவுடன்

(உ) கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின்

(4) விருப்பு முறி கூட்டாண்மை கலைப்பு (பிரிவு43)

ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் படி, பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால், நிறுவனம் கலைக்கப்படும்.

(5) நீதிமன்றத்தால் கலைப்பு (பிரிவு:44)

நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்காணும் காரணங்களினால் வழக்கு தொடர்ந்து நிறுவனத்தை கலைக்கலாம்.

(அ) கூட்டாளியின் மனச்சமநிலை இழப்பு

(ஆ) கூட்டாளிக்கு ஏற்படும் நிலையான திறமையின்மை

(இ) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை

(உ) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக் கேடு

(உ) அனுமதியின்றி கூட்டாளி தொழிலின் பங்கை உரிமை மாற்றம் செய்தால்

(ஊ) நீதி நேர்மை அடிப்படையில்

பகுதி -3

நிறுமங்கள்-1

1. தனி வரையறை நிறுமம் - வரைவிலக்கணம் தருக.

தனிவரையறு நிறுமத்திற்கு செயல்முறை விதிகளில் கீழ்காணும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கும்.

1. பங்குகளை மாற்றிக் கொடுக்க உரிமையில்லை.
2. குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை 2 அதிகபட்ச உறுப்பினர்கள் கடந்த மற்றும் தற்போது பணியாளர் - உறுப்பினர் நீங்கலாக 50 பேர்.
3. பொதுமக்களிடம் பங்கு வாங்கச் சொல்லி தகவலறிக்கை வெளியிடத் தடை.

2. ஒப்புறுதி நிறுமம் என்றால் என்ன?

நிறுமம் கலைப்பிற்குள்ளாகும்போது அதன் கடன்களை தீர்க்க போதுமான சொத்து இல்லாத நிலையில் தானே முன் வந்து தருவதாக ஒப்புறுதி அளித்த தொகை அளவிற்கு மட்டுமே பங்குநரின் பொறுப்பு வரையறை செய்யப்படுகிறது. அத்தகைய நிறுமத்தில் பங்குமுதல் இருக்கலாம், பங்குமுதலின்றியும் இருக்கலாம்.

3. அரசு நிறுமம் என்றால் என்ன?

ஒரு நிறுமத்தில் செலுத்தப்பெற்ற பங்குமுதலில் 51விழுக்காட்டுக்கு மேல் மைய அரசோ, மாநில அரசோ, இரண்டும் சேர்ந்தோ, மாநில அரசுகள் சேர்ந்தோ வைத்திருப்பின் அந்நிறுமம் அரசு நிறுமம் ஆகும். (எ.கா)S A I L , B H E L

5. நிறுமச் செயல்முறை விதிகளில் எவை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும்?

செயல்முறை விதிகளில் நிறுமத்தின் உள் மேலாண்மைக்குத் தேவையான நடைமுறை விதிகளை காணலாம்.நிறுமத்தின் சில அதிகாரங்களை செலுத்த இதில் முன்கூட்டியே வழிசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

6. எக்காரணங்களுக்காகப் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

குறைந்தது 14 நாள் அறிவிக்கை கொடுத்தும் அழைப்புப் பணத்தை செலுத்தாத காரணத்தால் பங்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இது ஒறுப்பிழப்பு ஆகும்.அப்பங்குகள் மீண்டும் மறு வெளியீடு செய்யப்பட்டு பங்குப்பணம் திரட்டப்படும்.

7. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும்?

தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் வெளியிட்ட பங்குகளில் 90% அளவிற்கு குறைந்த பங்கொப்பம் பெறப்படவில்லையெனில் பெறப்பட்ட பணம் அனைத்தையும் திருப்பித்தர வேண்டும். ஒதுக்கீடு செய்யக் கூடாது.

8. கடனீட்டுப் பத்திரம் வரைவிலக்கணம் தருக.

கடனை ஒப்புக்கொள்ளும் அல்லது கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம். இது கடன் பெற்றமைக்காக நிறுமம் பொதுமுத்திரையுடன் வழங்கும் ஒரு ஒப்புகை ஆவணம். இயக்குநர் கையொப்பமிட்டு வழங்கப்படும்.

9. வரையறு பொறுப்பு என்றால் என்ன?

கூட்டுப் பங்கு நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு, அவர் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்தப்படாத தொகை அளவிற்கே வரையறுக்கப்பட்டுள்ளது. பங்குகட்கான முழுத் தொகையும் செலுத்திவிட்டால், நிறுமம் கலைக்கப்படும்பொழுது அதன் கடன்களைத் தீர்க்க மேற்கொண்டு பணம் செலுத்தத் தேவையில்லை. இதுவே வரையறு பொறுப்பு.

10. பங்குமுனைமம் என்றால் என்ன?

பங்குகளை முகமதிப்பைவிட அதிகமான விலைக்கு வெளியிட்டால் அது முனைமத்தில் வெளியிட்டதாகும். முகமதிப்பைவிட எவ்வளவு அதிகமோ அதுவே முனைமத் தொகை.இது சாதாரணமாக ஒதுக்கீட்டுப் பணத்துடன் வசூலிக்கப்படும்.

11. கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற பதிவாளரிடம் எந்த ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டும்?

1) அமைப்பு முறை ஏடு

2) செயல்முறை விதிகள்

3) இயக்குநர் பட்டியல்

4) இயக்குநர்களாக இருக்க எழுத்து மூலமான இசைவு

5) சட்டமுறை உறுதிபிரகடனம்

6) பதிவு அலுவலகத்தின் முகவரி

7) நிறுமப் பதிவாளரிடம் பெற்ற பெயருக்கான ஒப்புதலின் அசல்

13. குவிவு முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன?

போதிய ஆதாயம் இல்லையெனில் பங்காதாயம் வழங்கப்படாது எனினும் வழங்கப்படாத பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமை படைத்த பங்குதான் குவிவு முன்னுரிமைப் பங்கு. வேறு எதிர்மறையாக குறிப்பிடப் பட்டிருக்கவில்லையெனில்,முன்னுரிமைப் பங்குகள் அனைத்தும் குவிவு முன்னுரிமைப் பங்குகளே.

14. நீடித்த வாழ்வு என்றால் நீவிர் அறிவது யாது?

உறுப்பினர் வரலாம், போகலாம் ஆனால் நிறுமம் எப்போதும் இயங்கக் கூடியது.நிறுமம் அதனை உருவாக்கிய தோற்றுவிப்பாளர்கள் உட்பட எவரிடமிருந்தும் வேறுபட்டு இயங்குவது.இதனால் உறுப்பினர் மாற்றம் நிறும இயக்கத்தை பாதிக்காது.இதனால் நிறுமம் நீடித்த வாழ்வுடையது.

15. மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள் என்றால் என்ன?

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின் அல்லது நிறுமம் விரும்பியபோது கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பின், அவை மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படுகின்றன.

16. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?

பங்குகள் முகமதிப்பை விட குறைவான தொகைக்கு வெளியிட்டால் பங்குகள் வட்டத்தில் வெளியிடப்பட்டதாகப் பொருள்.(எ.கா) ரூ.10.முகமதிப்புடைய பங்கு ரூ.8க்கு வெளியிடப்படுதல்.வட்டத்தில் பங்குவெளியிட சட்டம் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

17. மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன?

செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின் இவ்வகை பங்குகளை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குப்பின் நிபந்தனைப்படி பணத்தை திரும்பக் கொடுத்து பங்குகளை மீட்டுக் கொள்ளலாம்.

முழுதும் செலுத்தப் பெற்றதாக இருந்தால் மட்டுமே நிறுமம் அவற்றை மீட்க முடியும்.

18. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் கொண்டுள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் எனப்படும்.எடுத்துக்காட்டு: நோக்கியா, கோக்கோ-கோலா, பெப்சி

19.ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல் என்றால் என்ன?

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் மீண்டும் நிறுமத்திற்கு வந்துவிடுகின்றன. எனவே பங்கு முதல்தொகைக் குறைந்துவிடும். அப்பங்குகளை நிறுமம் மீண்டும் வெளியிடலாம்.இதுவே மறுவெளியீடு ஆகும்.அப்பங்குகளை வட்டத்தில் மறுவெளியீடு செய்யப்படும்.

நிறுமங்கள்-2

1) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?

ஒரு பொது வரையறு நிறுமம் கட்டாயமாக கூட்டவேண்டிய பங்குநர்களின் முதல் கூட்டம் இது.

தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்குப் பின்னர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

நிறும வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது.

2) சட்டமுறை அறிக்கை என்றால் என்ன?

பொது நிறுமம் சட்டமுறைக் கூட்டம் கூட்டுவதற்கு 21 நாட்களுக்கு முன்னர் (கூட்ட அறிவிக்கையுடன்) அனைத்து உறுப்பினருக்கும் அனுப்பவேண்டிய அறிக்கையே சட்டமுறை அறிக்கையாகும்.

சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்துப் பங்குநர்கள் விவாதிக்கலாம்.

3) சிறப்புப் பொதுக்கூட்டம் எப்பொழுது கூட்டப்படுகிறது?

ஒரு அவசரமான அல்லது சிறப்பான பொருள் குறித்த தீர்மானத்தை அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை தள்ளிப்போட இயலாதநிலையில் இக்கூட்டம் கூட்டப்படுகிறது.

4) சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?

சட்டம் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுள்ளோர் வேண்டுகோள் விடுத்தால் (21 நாட்களுக்குள்) இயக்குநரவை, சிறப்புப் பொதுக் கூட்டத்தை கூட்டலாம்.நிறும சட்ட அவையால் கூட்டப்படலாம்.

5) பகராள் என்றால் என்ன?

நிறும ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தனக்குப் பதில் கலந்து கொள்ள ஒரு பங்குநரால் நியமிக்கப்படும் நபர் பகராள். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

6) கூட்டத்தில் குறைவெண் என்றால் என்ன?

ஒரு கூட்டத்தைக் கூட்ட தேவைப்படும் குறைந்த அளவு நபர்களின் எண்ணிக்கை குறைவெண்.

தனி வரையறு நிறுமமாயின் குறைந்தது 2 உறுப்பினர்கள்.பொது வரையறு நிறுமமாயின் 5 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

7) நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?

கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல் என்று கூறப்படுகிறது.கூட்டத் தலைவருடன் கலந்து, நிறும செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

8) நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?

நிறுமக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப் பெற்ற முடிவுகளின்உண்மையான, சரியான பதிவுகளை செய்யும் ஏடு நிகழ்ச்சிக் குறிப்பேடு. நிகழ்ச்சி குறிப்பு சுருக்கமாக, உண்மையானதாக இருக்க வேண்டும்.

9) இயக்குநர்கள் நியமிக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.

இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர்.

இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர்.

ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குநரால் தேர்ந்தெடுப்பர்.

இயக்குநரவையே கூடுதல் இயக்குநரை நியமிக்கும்.நிதிநிறுவனம், வங்கிகள் கூட இயக்குநர்களை நியமிக்கலாம்.மைய அரசும் நியமனம் செய்யலாம்.

10) மாற்று இயக்குநர் என்பவர் யார்?

இயக்குநரவை சாதாரணமாகக் கூடும் மாநிலத்திலிருந்து 3 மாதங்களுக்கு குறையாமல் இயக்குநர் ஒருவர் வெளிச்சென்று இருப்பதால் அவர் இயக்குநரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாத நிலையில் மாற்று இயக்குநர் ஒருவரை இயக்குநரவை நியமித்துக் கொள்ளலாம்.

11) சிறப்புத் தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும்?

சிறப்புப் பொருள் குறித்து நிறைவேற்றப்பட வேண்டியது சிறப்புத் தீர்மானம்.நான்கில் மூன்று பங்குஉறுப்பினர்கள் ஆதரித்து இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

12) மேலாண்மை ஊதியம் குறித்துச் சுருக்கி வரைக.

நிறுமத்தில் மேலாண்மை ஊதியம் என்பது மாதாந்தோறும் செலுத்தலாம்.நிகர இலாபத்தில், குறிப்பிட்ட விழுக்காடு செலுத்தலாம்.ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் அதன் நிகர இலாபத்தில் 11 % க்கு மிகக் கூடாது.

1.பத்திரம் என்றால் என்ன?

பத்திரம் என்பது ஒருவரின் உடமை உரிமை அதாவது பங்கு உரிமை அல்லது கடனீட்டுப் பத்திர உரிமையை குறிக்கும் ஆவனம் அல்லது சான்றிதழைக்குறிக்கும்.

4.தகவறிக்கை என்றால் என்ன?

ஒரு நிறுமம் பங்குகளை,கடனீட்டுப் பத்திரங்களை வாங்க பொதுமக்களை அழைக்க வெளியிடும் ஆவணம்தகவலறிக்கை ஆகும்.

5.குறுமப்பங்கொப்பம் அல்லது குறைந்தளவு பங்கெடுப்பு என்றால் என்ன?

நிறுமம் வெளியிடும் மொத்தப்பங்கு எண்ணிக்கையில் 90 % அளவிற்காவது பொதுமக்களிடமிருந்து விண்ணப்பம் பெற்றிருக்க வேண்டும்.இல்லையென்றால் பங்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது.

6.பட்டியலிடுதல் என்றால் என்ன?

பங்குமாற்றகங்களின் அலுவல்பட்டியலில் பத்திரங்களை சேர்ப்பதே பட்டியலிடுதல் எனப்படும்.

பட்டியலிடுதல் ஒரு நிறுமத்திற்கு அதிக மதிப்பினைத் தருகிறது.

தற்பொழுது பட்டியலிடுதல் அனைத்து நிறுமங்களுக்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

7.இராக்டேல் முன்னோடிகள் என்பவர்கள் யாவர்?

முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844 ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கப்பட்டது.

இதனை இராபர்ட் ஓவன் என்பவர் தொடங்கினார்.

எனவே அவர் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படிகிறார்.

இந்த சங்கமே கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னோடியானது

எனவே இது இராக்டேல் முன்னேடிகள் என்று அழைக்கப்படுகிறது.

8.ஒரு நபர் ஒரு வாக்கு என்றால் என்ன?

கூட்டுறவு சங்கத்தில்உறுப்பினர் ஒருவர் எத்தனைப் பங்குகள் வைத்திருந்தாலும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு.ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூலம் சங்கம் நடத்தப்படிகிறது.

9.தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளின் எடுத்துக்காட்டுகள் தருக.

சென்னை ------------ காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி: கோவை -------------- சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி

வேலூர்---------------- கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி

மதுரை ------------------ பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி.

10.நாட்டுடமையாக்கம் என்றால் என்ன ?

தனியார் துறையில் செயல்பட்டு வரும் தொழில் அமைப்பை அரசு எடுத்துக்கொண்டால் அது நாட்டுடமையாக்கம் எனப்படும்.நாட்டு மக்கள் நலன் கருதியே நாட்டுடமையாக்கம் செய்யப்படுகிறது.

11.அரசுத் தொழில்களை எவ்வாறு உருவாக்கலாம்?

அரசு முதலீடு செய்து புதிய தொழில் அமைப்பை உருவாக்கலாம்.தனியார் துறையில் செயல்படும் தொழில்களை நாட்டுடமையாக்கலாம்.

1)முதலீட்டாளர், ஊகவணிகர்ஆவர்களுக்கிடையஊள்ளவேறுபாடுகள்?

| முதலீட்டாளர்கள் | ஊக வணிகர்கள் |
|---|---|
| வருவாய்தரக்கூடியபத்திரங்களில்முதலீடுசெய்பவர்கள் | லாபத்துடன்விற்கும்நோக்குடன்தற்போதுபத்திரங்களை வாங்குபவர்கள் |
| முதலீடுகளின்பாதுகாப்பையேபெரிதும்விரும்புவர் | மதிப்பு அதிகரிப்பதிலும் , இலாபம்பெறுவதிலும்குறியாக இருப்பர். |
| முதலீடுகளின்மூலம்வருவாய்உட்டுவதையேவிரும்புவர் | பத்திரங்களைவாங்கிவிற்பதன்மூலம்கிடைக்கும் இலாபத்தையேவிரும்புவர் |
| வாங்கும்போது பணத்தைக்கொடுத்துபத்திரங்களின்உடமையைபெற்றுக்கொள்வர் ,விற்கும் போது பணத்தைப் பெற்றுக்கொண்டு உடமையைத் தருவர். | பத்திரங்களின்உடமையைபெறுவதோஅல்லதுதருவதோ இல்லை. |
| நீண்டகால உடன்பாடும் பொறுப்பும் உள்ளவர் | குறைந்த கால உடன்பாடும் பொறுப்பும் உள்ளவர் |
| இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| நிலையான வருவாய் | நிலையற்ற ஆதாயம் |

2) ஊகவணிகர்களின்வகைகளைவிவரி.

இந்தியாவில்பங்குமாற்றகங்களில்நான்குவகையான ஊகவணிகர்கள்செயல்படுகின்றனர்.அவர்கள்

1. காளை ,2. கரடி ,3. கலைமான் ,4. முடவாத்து என்று அழைக்கப்படுகின்றனர்.

1. காளை

பத்திரங்கள்ஏதிர்காலத்தில்விலையேரும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர்காளை எனப்படுகிறார். இவர் எல்லாம்நன்மைக்காகவேநடைபெறும் என்றமனப்பாங்குகொண்டவர்.

இந்தவகைஊகவணிகர்விலையைஉயரச்செய்யும்நோக்கோடுசெயல்படுவதால்காளை எனபெயர்பெற்றுள்ளார்.

2. கரடி

பங்குகளைத்தற்போதுவிற்றுபின்னர் அவைகளைக்குறைந்தவிலையில்வாங்கும் எண்ணத்தில்செயல்படுவார்.

பத்திரங்கள் எதிர்காலத்தில்விலைகுறையும் என்று எதிர்பார்க்கின்றவணிகர்கரடிவகை ஆவார்.

ஒருகரடி ஊகவணிகர் எதிலும்பின்னோக்கியமனப்பாங்குகொண்டவர்.

3. கலைமான்

கலைமான் ஊகவணிகர்கள்முன்னெச்சரிக்கைஉடையவர்கள்.

இவர்கள் ஒருநிறுமத்தின்பங்குகள்முனைமத்தில்விற்கப்படும் என அறிந்தவுடன்புதியவெளியீடுகளுக்குவிண்ணப்பம்செய்வர்.

தனக்குபங்குகள் ஒதுக்கப்பட்டால் அதிகவிலைக்குவிற்று இலாபம் அடைவர்.

இவர்முனைமவேட்டையாளர் என்றும் அழைக்கப்படுகிறார்.

4. முடவாத்து

தம்பத்திரநடவடிக்கைகளில்தற்போதுஉள்ள இடர்பாடுகளைத்தீர்ப்பதில்போராடிக்கொண்டிருக்கின்ற ஒருகரடி ஊகவணிகரேமுடவாத்து என்று அழைக்கப்படுகின்றார்.

பெரிய இழப்பைதவிர்ப்பதற்குபோராடிக்கொண்டிருப்பவர்.

3) போல்ட் எவ்வாறுசெயல்படுகிறது? அதன் ஆற்றல்கள்யாவை ?

போல்ட்

போல்ட்ஏன்பதுமும்பைபங்குச்சந்தையில்மார்ச் 1995 முதல்நடைமுறையில்உள்ள ஒருவணிகச்செயல்பாடாகும்.தற்போது 6000 பம்பாய்பங்குமாற்றத்தின்வணிக இணைப்புகள் நாடுமுழுவதும்செயல்பட்டுகொண்டிருக்கின்றன.கணிப்பொறிமூலமாக ஒருமத்தியவாணிக இயந்திரத்தின் மூலம் சிறந்த ஏலத்தொகையும், பேரங்களும் முடிக்கப்படுகின்றன.

போல்ட்டின் ஆற்றல்கள்

1. மனிதசெயல்பாட்டில் இயற்கையாகவே அமைந்திருக்கின்றசெயல்திரமையின்மையை போக்குகின்றது.

2. பங்குமாற்றகங்களின்வாணிகக்கொள்திறனை அதிகரிக்கின்றது

3. பொருந்திவராதவணிகத்தைத்தவிர்க்கிறது.

4. தடங்கலற்றமுறையில்சந்தைநடவடிக்கைகளைநடைபெறச்செய்கின்றது.

5. பங்குகளின்விலைகள், குறியீடுகள்போன்றதகவல்களைஉபயோகிப்பாளருக்கு அளிக்கிறது.

6. பங்குமாற்றகங்களுக்குநன்கு ஆராயப்பட்டதகவல்களை அளிக்கின்றது.

4) பரஸ்பரநிதியகம் - விளக்குக. ?

பரஸ்பரநிதிகள்சிறுமுதலீட்டாளர்களின்சேமிப்பைநிறுமப்பத்திரங்களில்முதலீடுசெய்துமூலதன ஆதாயம்பெறுவதுடன், வட்டிமற்றும்பங்காதாயத்தையும்பெறுகிறது.

நன்மைகள்

1. சிறுமுதலீட்டாளர்களின்சேமிப்பை ஒன்றுதிரட்டி அவற்றைநிறுமங்களில்முதலீடுசெய்கிறது.

2. பரஸ்பரநிதியகம்பெறும் இலாபத்தைதம்வாடிக்கையாளர்களுக்குப்பங்காதாயமாகவழங்குகிறது

3. பரஸ்பரநிதிகள்தங்கள்வாடிக்கையாளர்களுக்குத்தனிப்பட்டவரிச்சலுகைகளை அளிக்கின்றன.

4. சிறியமுதலீட்டாளர்களுக்குமுதலீடுசெய்வதற்கானவசதிகளை அளிக்கின்றது.

5. முதலீட்டாளர்களின்விருப்பத்திற்கேற்பநலத்திட்டங்களைவகுத்துபங்குநர்களின்நிதி இடர்களை

குறைக்கிறது.

6. மக்களிடையேசேமிப்புபழக்கத்தையும்சேமிப்போரின் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது.

5) ஒருநிறுமத்தில்இயக்குநர்வகிக்கும்நிலையைச்சுருக்கிக்கூறுக.

அ) இயக்குநர்கள் – முகவர்களாக

நிறுமத்தின்பொருட்டுப்பிறருடன்அவர்கள்ஒப்பந்தங்களில்உடுபடும்பொழுதும்நிறுமத்திற்காகஆவணங்களில்கையொப்பமிடும்பொழுதும்நிறுமத்திற்காகஇவர்கள்முகவர்களாகசெயல்படுகின்றனர்.

ஆ) இயக்குநர்கள் – பொறுப்பாண்மையர்களாக

அதாவதுபொறுப்பாண்மையர்ஒருவர்தம்மிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளசொத்துக்களைஎவ்வாறுபயன்பெறுநர்நலனுக்காகப்பயன்படுத்தவேண்டுமோ, அதுபோன்றேஇயக்குநர்கள்தங்களிடம்ஒப்படைக்கப்பட்ட

அதிகாரங்களையும், சொத்துக்களையும்,

முறையற்றவழியில்பயன்படுத்திச்சொந்தஆதாயம்பெறும்செயலில்உடுபடக்கூடாது.

இ) இயக்குநர்கள் – அதிகாரிகளாக :

இயக்குநர்கள்நிறுமத்தின்அதிகாரிகள்போன்றும்செயல்படுகின்றனர்.நிறுமமேலாண்மையில்உடுபடும்பொழுதுஅதன்முதன்மைசெயலதிகாரிகள்போன்றும்செயல்படுகின்றனர்.

6) ஒருபொதுவரையறுநிறுமத்தில்இயக்குநர்கள்எவ்வாறுநியமிக்கப்படுகின்றனர்?

இயக்குநர்கள்வழக்கமாகநிறுமசெயல்முறைவிதிகளில்பெயர்குறிப்பிட்டுநியமனம்பெறுவர்.இல்லையெனில்,

அமைப்புமுறைஏட்டில்கையொப்பமிட்டோர்முதலாம்இயக்குநர்களாகக்கருதப்படுவர்.

அ. நிறுமம்நியமிக்கும்இயக்குநர்கள்:

ஒவ்வோராண்டும்ஆண்டுப்பொதுக்கூட்டத்தில்பங்குநர்களால்தேர்ந்தெடுக்கப்படுவதன்மூலம்இயக்குநர்கள்நியமனம்பெறுகின்றனர்.

ஆ. இயக்குநரவைநியமிக்கும்இயக்குநர்கள்

கூடுதல்இயக்குநர்களைஇயக்குநரவையேநியமிக்கலாம்.தற்காலிகமாகஎழும்காலிஇடங்களைஇயக்குநரவையேநியமித்துநிரப்பலாம்.˙ மாற்றுஇயக்குநர்களையும்இயக்குநர்அவைநியமிக்கலாம்.

இ. மூன்றாம்தரப்பினர்நியமிக்கும்இயக்குநர்கள்

செயல்முறைவிதிகள்அதிகாரம்வழங்கினால்நிறுமத்திற்குகடன்வழங்கியிருக்கும்வங்கிஅல்லதுநிதிநிறுவனங்கள்தங்கள்சார்பில்பிரதிநிதிகளைஇயக்குநர்களாகநியமிக்கலாம்.

உ. மையஅரசுநியமிக்கும்இயக்குநர்கள்

நிறுமச்சட்டஅவைஅளித்தஆணையின்அடிப்படையில்மையஅரசுஇயக்குநர்களைநியமிக்கலாம்.

7. ஒருகூட்டம்செல்லத்தக்கதாகஇருக்கவேண்டின், என்னநிபந்தனைகள்தேவை?

ஒருகூட்டம்செல்லத்தக்கதாகஇருக்கவேண்டுமாயின், கீழ்க்கண்டநிபந்தனைகள்நிறைவுசெய்யவேண்டும்.

கூட்டத்தைகூட்டும்அதிகாரம்பெற்றவர்களால், கூட்டம்உரியமுறையில்கூட்டப்படவேண்டும்.அதாவது

1.இயக்குநர்அவை 2.பங்குநர் 3.நிறுமச்சட்டஅவை

சட்டவிதிகட்குப்பட்டுகூட்டம்அமையவேண்டும்.அதாவதுஉரியதலைவர்தலைமையில்நடைபெறுதலும்,

கூட்டத்திற்குச்சட்டம்வகுத்துள்ளகுறைந்தளவுஉறுப்பினர்கள்வருகைதருதலும்இன்றியமையாதவை.

சட்டவிதிமுறைகளின்படியும், செயல்முறைவிதிகளின்படியும்கூட்டம்நடைபெறவேண்டும்.

8. சட்டமுறைஅறிக்கையில்காணப்பெறவேண்டியவையாவை?

சட்டமுறைஅறிக்கையில்இடம்பெறுபவை.

1. ரொக்கத்திற்கும் ,வேறுமறுபயனுக்காகவெளியிடப்பட்டுள்ளபங்குகள்பற்றியவிவரங்கள்.

2. பங்குகள்மீதுபெற்றமொத்தபணம்மற்றும்பிறவழிகளில்பெற்றபணம்.

3. அறிக்கைதயார்செய்வதற்கு 7 நாட்களுக்குமுன்புவரைஉள்ளபெறுதல்-செலுத்தல்சுருக்கமானகணக்கு.

4. தொடக்கச்செலவுகள்குறித்தமதிப்பீடுஅல்லதுசெலவழித்தவை.

5. கூட்டஒப்புதலுக்காகவைக்கப்படவேண்டியுள்ளஒப்பந்தங்கள்.

6. நிறைவேற்றப்படாதஒப்பந்தங்களும்அதற்கானகாரணங்களும்.

7. பங்குஅல்லது,
கடனீட்டுப்பத்திரவெளியீட்டில்இயக்குநர்கட்குசெலுத்தியுள்ளஅல்லதுசெலுத்தவேண்டியுள்ளகழிவுஅல்லதுதரகுத்தொகை.

8. இயக்குநர்கள், மேலாண்மைஇயக்குநர்கள்மேலாளர், செயலர்ஆகியோர்குறித்தவிவரங்கள்.